DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.597 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 12 P.W.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் நான் தற்போது ஈரோடு மாவட்டம் வரப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 23.10.2024 ம் தேதி உடுமலை காவல் நிலையத்தல் தலைமை காவலர் தனலட்சுமி நிலைய அ லுவலில் இருந்த போது தாந்தோணியை சார்ந்த மல்லிகா க/பெ செல்லமுத்து என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்து எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 711/2024 ச/பி 331(3), 305(a) BNS ன் படி பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைக்கப்பட்டது. நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 23.10.2024 ம் தேதி 17.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசாமி மற்றும் சிபி சக்கரவர்த்தி ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை மாதிரி வரைபடமாக வரைந்து பார்வை மகசர் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் சாட்சிகள் மல்லிகா செல்லமுத்து ராசு (எ) முத்துசாமி முத்துகுமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவ இடத்தில் தடய அறிவியல் சோதனை நடத்த காவல் துணை கண்காணிப்பாளர் மூலமாக திருப்பூர் மாவட்ட தடய அறிவியல் கடிதம் வைத்ததில் தடய அறிவியல் துறையில் இருந்து வந்து உதவி ஆய்வாளர் விரல் ரேகை பிரிவு முத்துகுமார் என்பவரை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று ஆய்வு மேற்கொண்டேன். விரல் ரேகை நிபுணர் சம்பவ இடத்தில் கிடைத்த விரல் ரேகைகளையும் வாதி மற்றும் அவரது கணவர் கைரேகைகளையும் பெற்று கொண்டு ஆய்விற்கு எடுத்து சென்றார்.
3. பின்னர் விரல் ரேகை நிபுணர் தனது ஆய்வில் எதிரி அபிராஜ் என்பவரது இடது கை ரேகை விரல் ஒத்து போவதாக ஆய்வறிக்கையை அனுப்பினார். அதன் படி எதிரியானவர் கேரளா மாநிலம் ஆலத்துார் காவல்நிலைய குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி அபிராஜ் த/பெ. சுனில்ராஜ் என்பவரது இடது கைவிரல் ரேகை ஒத்து போவதாக கொடுத்த அறிக்கையின் படி நான் அவரை சம்பிரதாய கைது செய்து மனு தாக்கல் செய்த நிலையில் நான் பணி மாறுதல் ஆன நிலையில் காவல் நிலையம் வசம் ஒப்புவித்து சென்றேன். பின்னர் பொறுப்பேற்ற கொண்டு கோபால் காவல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணைக்காக எடுத்து கொண்டார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. எதிரியை நீங்கள் கைது செய்யவில்லை என்றால் நான் கைது செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்திர்கள் என்றால் விசாரித்தேன். சாட்சிகளை எங்கு வைத்து எந்த தேதியில் விசாரித்திர்கள் என்றால் 23.10.2024 ம் தேதி சம்பவ இடத்தில் வைத்து. சாட்சிகள் ராமசாமி மற்றும் சிபி சக்ரவர்த்தி இருவரும் புகார்வாதியின் உறவினர் என்று தெரிந்து கொண்டிர்களா என்றால் அது பற்றி தெரியாது. ராமசாமி தாந்தோணியை சேர்ந்தவர் என்றால் சரிதான், சிபிசக்ரவர்த்தி என்ன ஊர் என்றால் பூளவாடி ஆகும். சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் 4–5 வீடுகள் உள்ளது. 4–5 வீட்டுகாரரிகளிடம் பார்வை மகசர் சாட்சியாக இருக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அவர்கள் சம்பவம் இடத்தில் இல்லை, அருகில் இருந்தவர்களை கேட்டதால் சாட்சி கையொப்பம்

கேட்டோம் அவர்கள் செய்தார்கள பக்கத்து வீட்டுகாரர்களை சாட்சியாக போடவில்லை என்றால் அது பற்றி தெரியாது அருகில் இருந்தவர்களை சாட்சியாக போட்டோம். சம்பவ இடம் போகவிலலை என்றாலும்அதனால் தான் அங்குள்ளவர்கள் பற்றி விவரம் தெரியவில்லை என்றால் நான் சம்பவம் இடத்தில் வைத்து தான்பார்வை மகசர் தயார் செய்தோம் .

2. கைரேகை நிபுணர் வந்த விவரம் தெரியும் என்றாலும் அவர் உடன் இருந்திர்கள் என்றாலும் அவர் வரும்போது நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். கைரேகை நிபுணர் வந்து சேம்பிள் எடுக்கும் போது போட்டோ மற்றும் வீடியோ ஆகியவற்றை எடுத்து நீதிமன்றத்தில் வழக்கு கோப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவையில்லை அதனால் செய்யவில்லை. BNSS ன் படி போட்டோ வீடியோ எடுப்பது கட்டாயம் என்றால் வீடியோ எடுப்பது அவசியம் இல்லை என்பதால் எடுக்ககவில்லை. எதிரியை கைது செய்ய உடன் செல்லவிலலை என்றால் சரிதான் . காவல் நிலையத்திற்கு ஆதரவாக பார்வை மகசர் தயார் செய்து புலன் விசாரணை செய்தும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.